செ.வெ.எண்-35 நாள்-19.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

வெளிநாடுகளில் வேலைக்குச் செல்ல விரும்பும் மனுதாரர்களுக்கு, சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் சட்டபூர்வமாக மற்றும் பாதுகாப்பாக அயல்நாட்டு வேலை வாய்ப்புக்கு செல்வது குறித்த வழிகாட்டுதல்களை வழங்குகிறது. வெளி நாடுகளில் உள்ள பல்வேறு பணிக்காலியிடங்கள் குறித்த அனைத்து விவரங்களும் www.omcmanpower.com என்ற வலைதளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. இது ஒரு தமிழக அரசு நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தில் பதிவு செய்து கொள்பவர்களுக்கு அயல்நாடுகளில் பணிபெறும் வாய்ப்பினை இந்நிறுவனம் ஏற்படுத்தித் தருகிறது. குறிப்பாக, சவுதி அரேபியா, குவைத், ஓமன் போன்ற வளைகுடா நாடுகளுக்கு மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியிடங்களுக்கு அதிக அளவில் தகுதி வாய்ந்த நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்ய விருப்பமுள்ளவர்கள் 21-வயதிற்கு மேற்பட்டவராகவும், ஒரு வருடத்திற்குமேல் செல்லத்தக்க பாஸ்போர்ட் (கடவுச்சீட்டு) வைத்திருக்க வேண்டும். விண்ணப்பிப்பவர்கள் வேலைக்குரிய கல்வித்தகுதியுடன் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் மற்றும் திறனற்றோர் விண்ணப்பிக்க இயலாது. மேலும் இந்நிறுவனத்தில் பதிவு செய்வதற்கு அவரவரின் கல்வித்தகுதிகளுக்கு தகுந்தாற்போல் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டும். இந்தப்பதிவு 4 வருடங்களுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும். எனவே, வெளிநாட்டுக்குச் சென்று பணிபுரிய விரும்பும் மனுதாரர்கள் இந்நிறுவனத்தில் முறையாக பதிவு செய்து பணிவாய்ப்பு பெற்று பயனடையலாம்.

இந்நிறுவனம் குறித்த இதர விவரங்களுக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், ஒருங்கிணைந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகம், 42, ஆலந்தூர் ரோடு, கிண்டி, சென்னை-32 என்ற முகவரியிலோ அல்லது 044-22505886 / 22502267 என்ற தொலைபேசியிலோ, தொடர்பு கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**